# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.

தொலைபேசி: 044–22201337

மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in


**********

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032

முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),

******

புகார் மனு எண்.41/2020/பேரூ/

ஆணை நாள் 27 –02–2020

திரு.ஜெ.அசோக்,
236–4–வது தளம்
பூர்வ பிரிமிசஸ்
பழைய மகாபலிபுரம் சாலை,
ஒக்கியம்பேட்டை,
துரைப்பாக்கம்,
சென்னை. 600 097. - மனுதாரர்

செயல் அலுவலர்,
ஆயக்குடி பேரூராட்சி,
திண்டுக்கல் மாவட்டம். - எதிர் மனுதாரர்.

## ஆணை

சென்னை ஒக்கியம்பேட்டை, துரைப்பாக்கம், பழைய மகாபலிபுரம் சாலை, எண்.236, 4–வது மாடி பூர்வா பிரமிசஸ் என்ற முகவரியினைச் சேர்ந்த திரு.ஜெ. அசோக் என்பவரது 08.01.2020 நாளிட்ட புகார் இம்முறைமன்ற நடுவத்தில் 10.01.2020ல் பெறப்பட்டு, புகார் மனு எண்.41/2020 என எண்ணிடப்பட்டது. புகார் மனு மீதான அறிக்கைகள் பெறப்பட்டு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

திரு.ஜெ.அசோக் தனது புகார் மனுவில் தனது தாயார் திருமதி சுசீலா என்பவர் திண்டுக்கல் மாவட்டம், ஆயக்குடி பேரூராட்சியில் தலைமை எழுத்தராக பணிபுரிவதாகவும், மேற்படி பேரூராட்சி செயல் அலுவலர் தனது தாயார் தாழ்த்தப்பட்ட பிரிவினைச் சேர்ந்தவர் என்பவதால் தரக்குறைவாக நடத்துவதாக தெரிவித்து விசாரணை கோரி தனது மனுவினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 20.01.2020 நாளிட்ட அறிவிப்பாணை மூலம் மேற்படி மனுவின் நகல்திண்டுக்கல் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநருக்கு அனுப்பி வைக்கப்பட்டு அம்மனுவின் மீது உரிய விசாரணை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்க ஆணையிடப்பட்டது.

14.02.2020 நாளிட்ட திண்டுக்கல் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் கடிதத்தில் மேற்படி புகார் மனு தொடர்பாக திண்டுக்கல் மாவட்டம், ஆயக்குடி பேரூராட்சி அலுவலகத்தில் 06.02.2020 அன்று புகாருக்குட்பட்ட பேரூராட்சி செயல் அலுவலர், தலைமை எழுத்தர் மற்றும் அலுவலக பணியாளகளிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டதாகவும் இவ்விசாரணையில் ஆயக்குடி பேரூராட்சி தலைமை எழுத்தர் திருமதி சுசீலா என்பவர் தனது பணியினை முறையாக மேற்கொள்ளாமலும், அலுவலக

பணிகளில் அதிகளவில் முரண்பாடான நிலையில் செயல்படும் காரணத்தினாலேயே அவர் மீது பேரூராட்சி செயல் அலுவலரால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகவும், பேரூராட்சி செயல் அலுவலர் திரு.சி.கமர்தீன் இதுவரை பணிபுரிந்த இடங்களில் எவ்வித புகாருக்கும் இடமின்றி பணி செய்துள்ளதாகவும் செயல் அலுவலர் மீதுள்ள காழ்ப்புணர்ச்சியின் காரணமாகவே தனது மகன் திரு.அசோக் என்பவர் மூலம் உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு புகார் மனு அனுப்பியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் மேற்படி தலைமை எழுத்தர் இனி வரும் காலங்களில் தனது பணியினை முறையாக மேற்கொள்ளவும் புகார்கள் ஏதேனும் வரப்பெறின் மாவட்ட ஆட்சியரின் கவனத்திற்கு கொண்டு சென்று உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பணியமைப்பு/நிர்வாகம் தொடர்பான இப்புகார் மனு குறித்து வரப்பெற்ற திண்டுக்கல் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் விசாரணை அறிக்கையினை பதிவு செய்து புகார் மனு தள்ளுபடி செய்து ஆணையிடப்படுகிறது. மேலும் சம்பந்தப்பட்ட பணியாளர் தேவைப்படின் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித்தலைவர் அல்லது துறைத்தலைவருக்கு மனு செய்து கொள்ளுமாறும் தெரிவிக்கப்படுகிறது.

2020 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 27 –ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

–//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//–

செயலாளர். 27.2.20

பெறுநர்

1.திரு.ஜெ.அசோக்,
236–4–வது தளம்
பூர்வ பிரிமிசஸ்
பழைய மகாபலிபுரம் சாலை,
ஒக்கியம்பேட்டை,
துரைப்பாக்கம்,
சென்னை. 600 097.

2.செயல் அலுவலர்,
ஆயக்குடி பேரூராட்சி,
திண்டுக்கல் மாவட்டம்.

3.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
திண்டுக்கல் மண்டலம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
திண்டுக்கல்.